Vaidika Pandit Sri V Hariharan Collection, Thirunangur, Chennai

ஸ்ரீ :

பஜ கோவிந்தம்

ஸம்ஸ்க்ருத, தமிழ் மூலம்

(பதவுரை, கருத்துரையுடன்)



விலை

ரூ. 5

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection. Digitized by eGangotri

ஸ்ரீ :

ஸ்ரீ ராமசந்த்ர பரப்ரஹ்மணே நம :

லிப்கோவின் மகத்தான வெளியீடுகள் :

கீர்த்தனாசார்ய ஸ்ரீ உ.வே. ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்களின்

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

பால காண்டம் முதல் யுத்த காண்டம் முடிய
இரண்டு பாகங்களில் மொத்தம் 1800 பக்கங்கள்

★ ஒவ்வொரு முக்கிய கட்டத்திற்கும் முழுப் பக்கப் படங்கள் சேர்க்கப்பட்டுள்ளன

2 பாகங்களும் சேர்ந்து ரூ. 250
தபாலில் பெற விரும்புவோர் ரூ. 291
(M.O அல்லது டிராப்ட்) அனுப்புக

ENGLISH PROSE : Two Volumes together
Rs. 250; By Post Rs. 292

LIFCO

✆ 24341538
24336467

THE LITTLE FLOWER CO.

P.B. No. 1028, CHENNAI - 600 017

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

॥ श्रीः ॥

मोहमुद्गर नामकं

॥ भज गोविन्दम् ॥

ஸ்ரீ சங்கர பகவத்பாதர் அருளிய

மோஹ முத்கரம் என்னும்

பஜகோவிந்தம்

உரையாசிரியர் :
வித்யா விசாரத, ந்யாயரத்ந
கீழாத்தூர் **ஸ்ரீநிவாஸாச்சாரியார்,** P.O.L.
ந்யாயசிரோமணி, ஹிந்திவிசாரத்

பதிப்பகத்தார் :
தி லிட்டில் ப்ளவர் கம்பெனி
தியாகராயநகர் : : சென்னை - 600 017

லிப்கோ புத்தகங்கள் கீழ்க்கண்ட இடங்களிலும் கிடைக்கும் :
சென்னை : 1. லிப்கோ அஸோஷியேட்ஸ்,
"நாராயணா அபார்ட்மென்ட்ஸ்", 23/G-5, ராமேஸ்வரம் ரோடு,
(மாம்பலம் ரெயில் நிலையம் அருகில்)
தி.நகர், சென்னை-600 017.
2. எம். தாமோதரம் & கம்பெனி,
7, அம்பர்ஸன் தெரு, ஜார்ஜ் டவுன், சென்னை-600 108.
திருச்சி: தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,
17/1, நந்திகோயில் தெரு, தெப்பக்குளம், திருச்சி-620 002.
ஹிக்கின்பாதம்ஸ், மற்றும் பிரபல புத்தக வியாபாரிகள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

© Copyright with the Publishers

First Edition : 1975
Second Edition : 1980, 1984, 1987 1990, 1993, 1997
Third Edition : 2003

ஸ்ரீ:

முன்னுரை

அத்வைத மார்க்கத்தை நிலைநிறுத்திய பெருமை பெற்றவர் ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர். உபநிட்தங்களுக்கும், பகவத் கீதைக்கும், ஸ்ரீ வியாஸ ஸூத்திரங்களுக்கும் சிறந்த பாஷ்யம் எழுதி, ஞான மார்க்கத்திற்குச் சிறந்த பாதையை அமைத்துத் தந்த அதே சங்கரர் - பற்பல தேவதா ஸ்தோத்திரங்களையும் இயற்றி பக்தி மார்க்கத்தையும் பரப்பினார் எனின் மிகையாகாது.

அவர் எழுதிய பல பக்தி ஸ்தோத்திரங்களில் **'பஜகோவிந்தம்'** என்பது மிகவும் புகழ் பெற்றது. காரணம், உருவில் சிறியதாக இருந்தாலும் உயர்ந்த உண்மைப் பொருளை விளக்குவதிலும், உலகின் நிலையாமையை நிரூபிப்பதிலும், சுலோக ரூபமாக இருப்பினும் ராகமாகப் பாடுவதற்கு இசைந்த இசை நிலையிலும் இந்த ஸ்தோத் திரத்திற்கு ஈடு இதுவேதான். ஸ்ரீ சங்கர பகவத்பாதர் காசியில் தங்கி யிருந்தபோது, ஒரு கிழவர் 'டுக்ருஞ் கரணே' என்னும் இலக்கணச் சொல்லைத் திரும்பத் திரும்பக் கூறி மனப்பாடம் செய்வதைக் கேட்டு, மனம் நொந்து இந்த ஸ்தோத்திரத்தை இவர் இயற்றியதாகக் கர்ண பரம்பரைக் கதை உண்டு.

மோஹமுத்கரம் (அதாவது, மோகத்தைத் தகர்க்கும் சம்மட்டி) என்று முதற்பெயர் கொண்ட இந்த ஸ்தோத்ரம் 'பஜ கோவிந்தம்' என்று தொடங்குவதால் **'பஜகோவிந்தம்'** என்னும் பெயராலேயே அழைக்கப்படுகிறது.

பல தத்துவக் கருத்துக்கள் செறிந்த இந்த ஸ்தோத்ரத்தை எல்லாரும் படித்து, மனனம் செய்து மேன்மையடைய வேண்டும். பதவுரையையும் கருத்துரையையும் படித்தால், கூடவே ஸம்ஸ்கிருத மொழிஞானமும் ஏற்படும் என்று அவை சேர்க்கப்பட்டுள்ளன.

பதிப்பகத்தார்.

Laser Typesetting at :
Sri Maruthy Laser Printers, 173, Peters Road, Chennai-600 014.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

भज गोविन्दम् பஜகோவிந்தம்

1. கோவிந்தனை பஜனை செய்

भज गोविन्दं भज गोविन्दं
भज गोविन्दं मूढमते ।
सम्प्राप्ते सन्निहिते काले
नहि नहि रक्षति 'डुकृञ् करणे' ॥

பஜ கோவிந்தம் பஜ கோவிந்தம்
பஜ கோவிந்தம் மூடமதே!
ஸம்ப்ராப்தே ஸந்நிஹிதே காலே
நஹி நஹி ரக்ஷதி 'டுக்ருஞ் கரணே' ॥

பதவுரை

ஹே மூடமதே!	-	ஓ மூடமதியே!
கோவிந்தம்	-	கோவிந்தனை
பஜ	-	(மனத்தால்) நினைத்திரு
கோவிந்தம்	-	கோவிந்தனை
பஜ	-	(வார்த்தைகளால்) துதி செய்
கோவிந்தம்	-	கோவிந்தனை (கோவிந்தனுக்கு)
பஜ	-	(உடலால்) சேவை செய்!
ஸந்நிஹிதே	-	நெருங்கியதான
காலே	-	(மரண) காலமானது
ஸம்ப்ராப்தே	-	வந்துவிட்டபோது
'டுக்ருஞ் கரணே'	-	டுக்ருஞ் கரணே (முதலான இலக்கண பாடங்கள்)
நஹி நஹி ரக்ஷதி	-	காப்பாற்றவே காப்பாற்றாது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கருத்துரை

ஓ மூடனே, இறைவனுக்கு எப்பொழுதும் மனத்தாலும், வாக்காலும், உடலாலும் பணிபுரிவதை விட்டு, 'டுக்ருஞ் கரணே' போன்ற இலக்கணப் பாடங்களைப் பயில்வதால் பலனில்லை. அது இறுதிக் காலத்தில் உன்னைக் காப்பாற்றாது. ஆகவே, கோவிந்த னையே உன் மனோவாக்காயங்களால் எப்பொழுதும் பஜனம் செய்து கொண்டிரு.

2. பொன்னாசையை ஒழி!

मूढ जहीहि धनागम तृष्णां
कुरु सद्बुद्धिं मनसि वितृष्णाम् ।
यल्लभसे निजकर्मोपात्तं
वित्तं तेन विनोदय चित्तम् ॥

மூட! ஜஹீஹி தநாகம த்ருஷ்ணாம்
குரு ஸத்புத்திம் மனஸி வித்ருஷ்ணாம் ।
யல்லபஸே நிஜகர்மோபாத்தம்
வித்தம் தேந விநோதய சித்தம் ॥

பதவுரை

ஹே மூட!	-	ஓ மூடனே!
தநாகம த்ருஷ்ணாம்	-	பண வரவுக்கான பேராசையை
ஜஹீஹி	-	விட்டுவிடு
மனஸி வித்ருஷ்ணாம்	-	மனத்தில் ஆசையற்றதான
ஸத்புத்திம்	-	நல்ல புத்தியை
குரு	-	செய் (கொள்)
நிஜ கர்ம உபாத்தம்	-	தன் முன்வினையால் வந்துசேர்ந்த
யத்	-	எந்த

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வித்தம்	-	பணத்தை
லபஸே	-	அடைகிறாயோ
தேந	-	அந்தப் பணத்தினால்
சித்தம்	-	மனத்தை
விநோதய	-	சந்தோஷப்படுத்து.

கருத்துரை

ஓ மூடனே! இன்னும் பணம் வேண்டும் என்ற பேராசையை விட்டுவிடு. நீ முன் பிறவியில் செய்த தான தருமங்களுக்கேற்ப இப்பிறவியில் உனக்குச் செல்வம் வருகிறது. அப்படித் தானாக வந்த செல்வத்துடன் திருப்தியடைந்திரு. பேராசையால் மனத்தை குழப்பிக்கொள்ளாதே.

3. பெண்ணாசையை விடு!

नारी स्तनभर नाभी देशं
दृष्ट्वा मा गा मोहावेशम् ।
एतन्मांस वसादि विकारं
मनसि विचिन्तय वारं वारम् ॥

நாரீ ஸ்தநபர நாபீ தேஸம்
த்ருஷ்ட்வா மா கா மோஹாவேஸம் ।
ஏதந் மாம்ஸ வஸாதி விகாரம்
மநஸி விசிந்தய வாரம் வாரம் ॥

பதவுரை

நாரீ ஸ்தநபர நாபிதேஸம்	-	பெண்ணின் ஸ்தனங்கள், நாபிப்பகுதி என்பவைகளை
த்ருஷ்ட்வா	-	பார்த்து

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மோஹாவேஶம்	-	மயக்க வேகத்தை
மாகாः	-	அடையாதே
ஏதத்	-	இது
மாம்ஸ வஸாதி விகாரம்	-	மாமிசம், உவர்த்த தண்ணீர் என்பவைகளின் மாற்றுருவம்
(இதி)	-	(என்று)
மநஸி	-	மனத்தில்
வாரம் வாரம்	-	அடிக்கடி
விசிந்தய	-	நினைப்பாயாக

கருத்துரை

ஹே மூடனே! ஒரு பெண்ணின் ஸ்தனங்கள், தொப்புள் பகுதி முதலியவைகளைப் பார்த்து மயங்கிவிடாதே. இதெல்லாம் மாமிசத்தாலும் உவர்நீர் முதலிய அசுத்தமான பொருள்களாலும் தயாரானவை. எனவே, உனக்கு அவற்றின் மீது மயக்கம் ஏற்படும் போது சற்று நிதானித்து, அவைகள், ரத்தம், சீழ், மாமிசம் போன்ற அசுத்தப் பொருள்களல்லவா! என்று அடிக்கடி நினைப்பாயாகில் உனக்கு அவற்றின்மீது மோகம் ஏற்படாது.

4. வாழ்க்கையே நிலையில்லாதது!

नलिनी दलगत जलं अतितरलं
तद्वज्जीवितं अतिशय चपलम् ।
विद्धि व्याध्यभिमान ग्रस्तं
लोकं शोकहतं च समस्तम् ॥

நளிநீ தளகத ஜலம் அதிதரளம்
தத்வத் ஜீவிதம் அதிஶய சபலம் ।
வித்தி வ்யாத்யபிமாந க்ரஸ்தம்
லோகம் ஶோகஹதம் ச ஸமஸ்தம் ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பதவுரை

நளிநீ தளகத ஜலம்	-	தாமரை இலைமீதுள்ள தண்ணீர்
அதிதரளம்	-	மிகவும் சஞ்சலமானது
தத்வத்	-	அதேபோல்
ஜீவிதம்	-	வாழ்க்கையானது
அதிமய சபலம்	-	மிகவும் சஞ்சலமானது
ஸமஸ்தம்	-	எல்லா
லோகம் ச	-	உலகையும்
வ்யாதி அபிமாந க்ரஸ்தம்	-	நோய், கர்வம் என்பவைகளால் விழுங்கப்பட்டதாகவும்
மோகஹதம் ச	-	வருத்தத்தால் தாக்கப்பட்டதாகவும்
வித்தி	-	அறிவாயாக.

கருத்துரை

தாமரை இலைமீது ஒட்டாமல் அசைந்தோடிக் கொண்டிருக்கும் நீர்போல் மனிதவாழ்க்கை நிலையற்றது. உலகில் எங்குப் பார்த்தாலும் நோயும் செருக்கும்தான் காணப்படுகிறது. எவனும் தான் சுகமாக இருப்பதாக நினைப்பதில்லை. எனவே, நிலையற்ற இந்த உலக வாழ்க்கைக்காக வீணாக அலையாதே.

5. சுற்றம் சுயநலத்துடன் கூடியது

3 यावद् वित्तोपार्जन सक्तः
तावन्निज परिवारो रक्तः ।
पश्चाज्जीवति जर्जर देहे
वार्तां कोऽपि न पृच्छति गेहे ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

யாவத் வித்தோபார்ஜந ஸக்த:
தாவந் நிஜ பரிவாரோ ரக்த: ।
பஸ்சாத் ஜீவதி ஜர்ஜர தேஹே
வார்த்தாம் கோऽபி ந ப்ருச்சதி கேஹே ॥

பதவுரை

யாவத்	-	எதுவரை
வித்த உபார்ஜந ஸக்த :	-	பணம் சம்பாதிப்பதில் ஈடுபட்டிருக்கிறானோ
தாவத்	-	அதுவரை
நிஜபரிவார:	-	தன்னுடைய சுற்றமானது
ரக்த:	-	அன்பு கொண்டிருக்கும்
பஸ்சாத்	-	பிறகு
ஜர்ஜரதேஹே	-	தளர்ந்த உடலுடன் கூடியவனாய்
ஜீவதி (ஸதி)	-	பிழைத்திருக்கும்போது
கேஹே	-	வீட்டில்
கோऽபி	-	எவனும்
வார்த்தாம்	-	'என்ன சங்கதி' என்று
ந ப்ருச்சதி	-	கேட்கமாட்டான்.

கருத்துரை

ஒருவன் பணம் சம்பாதிக்கும் வரையில்தான் மனைவி மக்கள் எல்லாரும் அவனிடம் அன்பாகப் பழகிப் பணிவிடை செய்வார்கள். அவன் கிழத்தனத்தால் உடல் தளர்ந்து பணம் சம்பாதிக்காமல் வீட்டில் தங்கி விட்டானானால், வீட்டில் யாரும் அவனிடம் பேசவும் மாட்டார்கள். (எனவே 'பணத்திற்காகத்தான் உன் சுற்றத்தார், உன்னைச் சுற்றி வருகிறார்கள்' என்பதை உணர்ந்துகொள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

6. உயிர் உள்ளவரைதான் உறவு

यावत् पवनो निवसति देहे
तावत् पृच्छति कुशलं गेहे ।
गतवति वायौ देहापाये
भार्या बिभ्यति तस्मिन् काये ॥

யாவத் பவநோ நிவஸதி தேஹே
தாவத் ப்ருச்சதி குஶலம் கேஹே ।
கதவதி வாயௌ தேஹாபாயே
பார்யா பிப்யதி தஸ்மிந் காயே ॥

பதவுரை

யாவத்	-	எதுவரை
தேஹே	-	உடலில்
பவநः	-	மூச்சுக்காற்று
நிவஸதி	-	வாசம் புரிகிறதோ
தாவத்	-	அதுவரை
கேஹே	-	வீட்டில்
குஶலம்	-	(உன்) க்ஷேமத்தைப்பற்றி
ப்ருச்சதி	-	கேட்கிறார்
தேஹாபாயே	-	உடல் அழியும்போது
வாயௌ	-	பிராண வாயுவானது
கதவதி	-	சென்ற பிறகு
தஸ்மிந்	-	அந்த
நாயே	-	உடலைக் கண்டு
பார்யா	-	மனைவி(யும்)
பிப்யதி	-	பயப்படுகிறாள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கருத்துரை

நீ உயிரோடு உலவிவரும்போது வீட்டிலுள்ளவர்கள் அனைவரும் உன்னுடைய க்ஷேமத்தைப் பற்றி அடிக்கடி விசாரிக்கிறார்கள். உன் உயிர்போன பிறகு உன்னைக் கேட்பார் இல்லை. உன் மனைவி கூட உன் உயிரற்ற உடலைப் பார்த்து பயப்படுகிறாள்.

7. பணமென்பது துன்பமே

अर्थमनर्थं भावय नित्यं
नास्ति ततः सुखलेशः सत्यम् ।
पुत्रादपि धनभाजां भीतिः
सर्वत्रैषा विहिता रीतिः ॥

அர்த்தம் அநர்த்தம் பாவய நித்யம்
நாஸ்தி ததः ஸுகலேஶः ஸத்யம் ।
புத்ராதபி தநபாஜாம் பீதிः
ஸர்வத்ரைஷா விஹிதா ரீதிः ॥

பதவுரை

அர்த்தம்	-	பணத்தை
நித்யம்	-	எப்பொழுதும்
அநர்த்தம்	-	துன்பம் (என்று)
பாவய	-	எண்ணு
ததः	-	அதிலிருந்து
ஸுகலேஶः	-	சிறிதளவு சுகமும்
நாஸ்தி	-	இல்லை
ஸத்யம்	-	(இது) உண்மை
தநபாஜாம்	-	பணத்தைச் சேமித்து வைத்திருப்பவர்களுக்கு
புத்ராத் அபி	-	பிள்ளையிடம்கூட

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பீதி: - பயம்தான்.
ஏஷா - இந்த
ரீதி: - முறை
ஸர்வத்ர - எல்லாவிடத்திலும்
விஹிதா - ஏற்பட்டதுதான்.

கருத்துரை

பணத்தைச் சுகமென்று எண்ணாதே. அது எப்பொழுதும் துன்பத்தைத் தருவதுதான் என்று எண்ணு. அதனால் சிறிதும் ஸுக மில்லை. பணத்தைச் சேமித்து வைத்திருப்பவர்களுக்குப் பிள்ளை யிடம்கூடப் பயம் தான். எல்லாவிடத்திலும் பணத்தால் ஏற்படக் கூடிய துன்பம் சமமானதுதான்.

8. எவனும் தெய்வத்தை நினைப்பதில்லையே!

बालस्तावत् क्रीडासक्तः
तरुणस्तावत् तरुणीसक्तः ।
वृद्धस्तावत् चिन्ता सक्तः
परे ब्रह्मणि कोऽपि न सक्तः ॥

பாலஸ்தாவத் க்ரீடாஸக்த:
தருணஸ்தாவத் தருணீஸக்த:
வ்ருத்தஸ்தாவத் சிந்தாஸக்த:
ப்ரே ப்ரஹ்மணி கோபி ந ஸக்த: ॥

பதவுரை

பால: தாவத் - பாலகனோவென்றால்
க்ரீடாஸக்த: - விளையாட்டில் பற்றுக் கொண்டுள்ளான்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தருணः தாவத் - யௌவன வயதுள்ளவனோவென்றால்
தருணீஸக்தः - யௌவனப் பெண்ணிடம் பற்றுக் கொண்டுள்ளான்
வ்ருத்தः தாவத் - கிழவனோவென்றால்
சிந்தாஸக்தः - பயனற்ற கவலையில் ஈடுபட்டுள்ளான்
பரே ப்ரஹ்மணி - இறைவனிடம்
கோபி - எவனும்
ந ஸக்தः - பற்றுக் கொண்டானில்லை.

கருத்துரை

மனிதனுக்கு வாலிபம், யௌவனம், விருத்தாப்பியம் என மூன்று பருவங்கள் உள்ளன. குழந்தை விளையாடுவதில் காலம் கழிக்கிறான். வயது வந்தவன் பெண்ணுடன் காலம் கழிக்கிறான்; கிழவன் எப்பொழுதும் பயனற்ற கவலையால் பீடிக்கப்பட்டுள்ளான். யாரும் எந்தப் பருவத்திலும் தெய்வத்தைப் பற்றிச் சிந்தனையே செய்வதில்லை.

9. நீ யார் என்பதைக் கவனி

का ते कान्ता कस्ते पुत्रः
संसारोऽयं अतीव विचित्रः ।
कस्य त्वं वा कुत आयातः
तत्त्वं चिन्तय तदिदं भ्रांत ॥

கா தே காந்தா கஸ்தே புத்ரः
ஸம்ஸாரோऽயம் அதீவ விசித்ரः ।
கஸ்ய த்வம் வா குத ஆயாதः
தத்வம் சிந்தய ததிதம் ப்ராந்த ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பதவுரை

ப்ராந்த	-	குழப்பம் மிகுந்தவனே
தே	-	உன்னுடைய
காந்தா	-	(அன்பு) மனைவி
கா	-	யார்?
தே	-	உன்னுடைய
புத்ரः	-	மகன்
கः	-	யார்?
அயம்	-	இந்த
ஸம்ஸாரः	-	சம்சாரம் என்பது
அதீவ	-	மிகவும்
விசித்ரः	-	விசித்திரமானது
த்வம்வா	-	நீதான்
கஸ்ய	-	எவனைச் சேர்ந்தவன்?
குதः	-	எங்கிருந்து
ஆயாதः	-	வந்தாய்?
தத்	-	அப்படிப்பட்ட
இதம்	-	இந்த
தத்வம்	-	உண்மையை
சிந்தய	-	ஆலோசிப்பாயாக.

கருத்துரை

மனக்குழப்பம் மிக்கவனே, உனக்கு மனைவி யார்? மக்கள் யார்? இந்த உலக வாழ்க்கையே விசித்திரமானது. நீ யாருக்குச் சொந்தமோ? எங்கிருந்து வந்தாயோ? இந்த உண்மையைப் பற்றிச் சிந்தனை செய்.

நீ இந்த உடலல்ல என்பதைப் பற்றியும் எதனால் பிறவி எடுத்தாய் என்பதைப் பற்றியும் சிந்தனை செய்வாயாக.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai.

10. நல்லோருடன் இணங்கியிரு

सत्सङ्गत्वे निस्सङ्गत्वं
निस्सङ्गत्वे निर्मोहत्वम् ।
निर्मोहत्वे निश्चलतत्त्वं
निश्चलतत्त्वे जीवन्मुक्तिः ॥

ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம்
நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம் ।
நிர்மோஹத்வே நிஸ்சலதத்வம்
நிஸ்சலதத்வே ஜீவன்முக்திः ॥

பதவுரை

ஸத்ஸங்கத்வே	-	நல்லோரின் சேர்க்கை ஏற்பட்டால்
நிஸ்ஸங்கத்வம்	-	பற்றற்ற நிலை ஏற்படும்
நிஸ்ஸங்கத்வே	-	பற்றற்ற நிலை ஏற்படுமாகில்
நிர்மோஹத்வம்	-	மோகமற்ற நிலை ஏற்படும்
நிர்மோஹத்வே	-	மோகமற்ற நிலை ஏற்பட்டால்
நிஸ்சலதத்வம்	-	நிலையான உண்மைப் பொருள் தோன்றும்
நிஸ்சலதத்வே	-	நிலையான உண்மைப் பொருள் தோன்றினால்
ஜீவன்முக்திः	-	ஜீவன்முக்திநிலை ஏற்படும்.

கருத்துரை

நீ உண்மைப் பொருளை அறிந்த நல்லோர்களுடன் சேர்ந்து பழகினால் உலகப் பற்றை அறுப்பாய். உலகப் பற்று நீங்கினால் உன் மயக்கம் தொலையும். மயக்கம் தொலைந்தால் சாசுவதமான

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பரம்பொருளை அறிவாய். அதை அறிந்தால் நீ இந்த உலகில் வாழ்ந்திருக்கும்போதே ஞானியாக - அதாவது ஜீவன்முக்தனாக- ஆகிவிடுவாய். (இவ்வுலகிலேயே பேரின்பத்தை அடைவாய்).

11. ஆசையும் பொருளும் அழிந்துபோவன

वयसि गते कः कामविकारः
शुष्के नीरे कः कासारः ।
क्षीणे वित्ते कः परिवारः
ज्ञाते तत्त्वे कः संसारः ॥

வயஸி கதே கः காமவிகாரः
ஶுஷ்கே நீரே கः காஸாரः ।
க்ஷீணே வித்தே கः பரிவாரः
ஜ்ஞாதே தத்வே கः ஸம்ஸாரः ॥

பதவுரை

வயஸி	-	வயதானது
கதே	-	கழிந்துவிட்டபோது
காமவிகாரः	-	காமத்தின் செயல்கள்
கः	-	ஏது?
நீரே	-	நீரானது
ஶுஷ்கே	-	உலர்ந்துவிட்டால்
காஸாரः	-	தடாகம்
கः	-	ஏது?
வித்தே	-	செல்வமானது

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai.

க்ஷீணே	-	குறைந்துவிட்டால்
பரிவாரः	-	சுற்றம்
கः	-	ஏது?
தத்வே	-	உண்மைப் பொருளானது
ஜ்ஞாதே	-	அறியப்பட்டபோது
ஸம்ஸாரः	-	பிறவியாகிய ஸம்ஸாரம்
கः	-	ஏது?

கருத்துரை

யௌவனப்பருவம் தாண்டிவிட்டால் காமத்தால் ஏற்படும் செயல் இருக்காது. தண்ணீர் இல்லாவிட்டால் நீர்நிலைகள் இராதது போல், பணம் இல்லாவிட்டால் சுற்றத்தார் எவரும் அருகில் இரார். பரம்பொருளை அறிந்துவிட்டால் பிறப்பும் இறப்புமாகிய இந்த ஸம்சாரம் இராது.

ஆகவே, அழியக்கூடிய இன்பத்திற்காகவும் பொருளுக்காக வும், வீணாகக் காலத்தைக் கழிக்காமல் அழிவற்ற பரம்பொருளை அறிந்து, பிறவாமை பெறுவதே சிறந்தது.

12. கர்வப்படாதே

மா குரு தனஜனயௌவனகர்வம்
ஹரதி நிமேஷாத் காலः ஸர்வம் ।
மாயாமயம் இதம் அகிலம் ஹித்வா
ப்ரஹ்மபதம் த்வம் ப்ரவிஶ விதித்வா ॥

மாகுரு தந ஜந யௌவந கர்வம்
ஹரதி நிமேஷாத் காலः ஸர்வம் ।
மாயாமயம் இதம் அகிலம் ஹித்வா
ப்ரஹ்மபதம் த்வம் ப்ரவிஶ விதித்வா ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பதவுரை

தந ஜந யௌவந	-	பணம், சுற்றம், யௌவனப் பருவம் முதலியவை காரணமாக
கர்வம்	-	கர்வத்தை
மா குரு	-	செய்யாதே (கொள்ளாதே)
காலः	-	காலம்
நிமேஷாத்	-	ஒரே நிமிடத்திற்குள்
ஸர்வம்	-	அனைத்தையும்
ஹரதி	-	எடுத்துச் சென்றுவிடும்
இதம்	-	இது
அகிலம்	-	எல்லாம்
மாயாமயம் (இதி)	-	மாயா மயமானது என்று
ஹித்வா	-	விட்டுவிட்டு
ப்ரஹ்ம பதம்	-	பிரம்ம நிலையை
விதித்வா	-	அறிந்து
ப்ரவிஶ	-	அடைவாயாக.

கருத்துரை

'நான் பணக்காரன்', 'எனக்குச் சுற்றத்தார் இருக்கின்றனர்'; 'நான் யௌவனப்பருவம் நிரம்பியவன்' என்ற வகையில் கர்வப் படாதே. ஒரே நிமிடத்தில் காலம் இவற்றையெல்லாம் கொள்ளை கொண்டுபோய்விடும். 'இந்த உலகெல்லாம் பொய்க்காட்சி; பிரம்மமே உண்மையானது' என்று அறிந்து, நீயே பிரம்மமாக ஆகிவிடு.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

13. காலத்தின் விளையாட்டு

दिनयामिन्यौ सायं प्रातः
शिशिरवसन्तौ पुनरायातः ।
कालः क्रीडति गच्छत्यायुः
तदपि न मुञ्चत्याशावायुः ॥

தினயாமின்யௌ ஸாயம் ப்ராதः
ஶிஶிரவஸந்தௌ புநராயாதः ।
காலः க்ரீடதி கச்சத்யாயுः
ததபி ந முஞ்சத்யாஶாவாயுः ॥

பதவுரை

தினயாமின்யௌ	-	பகலும் இரவும்
ஸாயம்	-	மாலையும்
ப்ராதः	-	காலையும்
ஶிஶிர வஸந்தௌ	-	சிசிரருதுவும் வஸந்தருதுவும்
புநः	-	மறுபடியும்
ஆயாதः	-	வந்துவிட்டது
காலः	-	காலம்
க்ரீடதி	-	விளையாடுகிறது
ஆயுः	-	ஆயுள்
கச்சதி	-	போகிறது
ததபி	-	அப்படியிருந்தும்
ஆஶாவாயுः	-	ஆசையாகிய காற்று
ந முஞ்சதி	-	விடுவதில்லை.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கருத்துரை

காலம் விளையாடுகிறது. அது பகலாகவும், இரவாகவும் மாலையாகவும், காலையாகவும், குளிர்காலமாகவும், வசந்தகால மாகவும் மாறி மாறி காட்சியளிக்கிறது. இப்படிக்காலம் மாறி மாறி வர ஒருவனது உயிர்வாழ்க்கையும் முடிந்து விடுகிறது. இப்படி யிருப்பது தெரிந்தும் ஆசைமட்டும் அகல்வதில்லை. உயிர்க்காற்று நீங்கினாலும் ஆசையாகிய காற்று நீங்குவதில்லை.

14. ஆசையை அறவே ஒழி

का ते कान्ता धनगत चिन्ता
वातुल किं तव नास्ति नियन्ता ।
त्रिजगति सज्जन सङ्गतिरेका
भवति भवार्णवतरणे नौका ॥

கா தே காந்தா தநகத சிந்தா
வாதுல கிம் தவ நாஸ்தி நியந்தா ।
தரிஜகதி ஸஜ்ஜந ஸங்கதி ரேகா
பவதி பவார்ணவ தரணே நௌகா ॥

பதவுரை

ஹே வாதுல	-	மனமயக்கம் கொண்டவனே
தே	-	உனக்கு
காந்தா	-	மனைவி
கா	-	எவள்
தநகத சிந்தா	-	பணத்தின்மீதுள்ள ஆசை
கா	-	எத்தகையது?
தவ	-	உன்னை
நியந்தா	-	கட்டுப்படுத்துபவன்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நாஸ்தி கிம்?	-	இல்லையா? (இப்போதே உணர்ந்துகொள்)
த்ரிஜகதி	-	மூவுலகிலும்
ஸஜ்ஜந ஸங்கதிः	-	நல்லோர்களின் சேர்க்கை
ஏகா	-	ஒன்றே
பவார்ணவ தரணே	-	பிறவிக் கடலைக் கடப்பதற்கு
நௌகா	-	ஓடமாக
பவதி	-	ஆகிறது.

கருத்துரை

மனமயக்கம் கொண்டவனே! உனக்கு மனைவி என்பவள் யார்? பணம் பணம் என்று எப்பொழுதும் நினைத்திருந்தாயே. அந்தப் பணத்தாசை எத்தகையது? (இவற்றையெல்லாம் இப்போதே உணர்ந்துகொள்). நல்லோர் சகவாசம் ஒன்றுதான் மூவுலகிலும் உன்னை இந்தப் பிறவிக்கடலிலிருந்து கரையேற்றும் ஓடம் என்பதைத் தெரிந்துகொள்.

15. எல்லாம் வயிற்றுக்காகத்தான்!

जटिलो मुण्डी लुञ्चितकेशः
काषायाम्बर बहुकृत वेषः ।
पश्यन्नपि च न पश्यति मूढो
ह्युदर निमित्तं बहुकृतवेषः ॥

ஜடிலோ முண்டீ லுஞ்சிதகேஶः
காஷாயாம்பர பஹுக்ருத வேஷः ।
பஶ்யந்நபி ச ந பஶ்யதி மூடோ
ஹ்யுதர நிமித்தம் பஹுக்ருத வேஷः ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பதவுரை

ஜடிலः	-	சடை தரித்தவனும்
முண்டீ	-	மொட்டையடித்தவனும்
லுஞ்சிதகேசः	-	மயிரைக் கத்தரித்துக் கொண்டவனும்
காஷாயாம்பர-பஹுக்ருதவேஷः	-	காஷாயத் துணியால் பெரிதாக வேஷம் போட்டவனுமான
மூடः	-	மூடன்
பஶ்யந்நபி	-	பார்த்துக்கொண்டிருந்தாலும்
ந பஶ்யதி	-	பார்ப்பதில்லை
உதரநிமித்தம்	-	வயிற்றின் காரணமாக
பஹுக்ருதவேஷः	-	அதிகமாகச் செய்யப்பட்ட வேஷத்தை உடையவன்

கருத்துரை

ஒருவன் சடைதரித்து ரிஷிபோல் வேஷம் போடுகிறான். ஒருவன் மொட்டையடித்துக் கொள்கிறான். மற்றொருவன் தலை மயிரைப் பிடுங்கி எறிகிறான். இன்னுமொருவன் காஷாயத்தை அலங்காரமாக உடுத்தி எல்லோரையும் மயங்கச் செய்கிறான். இந்த மூடர்களெல்லாம் கண் இருந்தும் உலகம் பொய் என்பதைக் காண்பதில்லை. இவர்கள் பலவகையான வேஷம் போடுவதும் கூட இந்த வயிற்றுக்காகத்தான்.

16. ஆசை விடுவதில்லையே!

अङ्गं गलितं पलितं मुण्डं
दशन विहीनं जातं तुण्डम् ।
वृद्धो याति गृहीत्वा दण्डं
तदपि न मुञ्चत्याशा पिण्डम् ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அங்கம் கலிதம் பலிதம் முண்டம்
தஶந விஹீநம் ஜாதம் துண்டம் ।
வ்ருத்தோ யாதி க்ருஹீத்வா தண்டம்
ததபி ந முஞ்சத்யாஶா பிண்டம் ॥

பதவுரை

அங்கம்	-	உடல்
கலிதம்	-	தளர்ந்துவிட்டது
பலிதம்	-	(மயிர்) நரைத்துவிட்டது
முண்டம்	-	(தலை) மொட்டையாகிவிட்டது
தஶநவிஹீநம்	-	பற்களற்ற
துண்டம்	-	வாயாகவும்
ஜாதம்	-	ஆகிவிட்டது
வ்ருத்தः	-	(அத்தகைய) கிழவன்
தண்டம்	-	தடியை
க்ருஹீத்வா	-	பிடித்துக் கொண்டு
யாதி	-	செல்கிறான்
ததபி	-	அப்படியிருந்தும்
ஆஶாபிண்டம்	-	பல்வகையான ஆசைகளும்
ந முஞ்சதி	-	விடுபடுவதில்லை

கருத்துரை

கிழத்தனத்தால் ஒருவனுடைய உடலானது தளர்ந்தும், தலை நரைத்தும், சிலருக்கு மொட்டையாகவும், வாய்ப்பற்கள் உதிர்ந்தும், இயலாமை தோன்றுகிறது. அந்த நிலையில் தடியைப் பிடித்துக் கொண்டு நடக்கிறான். அப்போதும் பல்வகைப்பட்ட ஆசைகள் அவனை விட்டபாடில்லை.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

17. துன்பத்திலும் ஆசைவிடுவதில்லை

अग्रे वह्निः पृष्ठे भानुः
रात्रौ चुबुक समर्पित जानुः ।
करतल भिक्षस्तरुतल वासः
तदपि न मुञ्चत्याशा पाशः ॥

அக்ரே வஹ்நிः ப்ருஷ்டே பாநுः
ராத்ரௌ சுபுக ஸமர்ப்பித ஜாநுः ।
கரதல பிக்ஷுஸ் தருதல வாஸः
ததபி ந முஞ்ச த்யாஸா பாஸः ॥

பதவுரை

அக்ரே	-	(தவமுயற்சி செய்யும் ஒருவன் தன்) எதிரில்
வஹ்நிः	-	நெருப்பு (வெட்பம் கக்க)
ப்ருஷ்டே	-	பின்புறத்தில்
பாநுः	-	சூரியன் (வெப்பம் தாக்க உடலை வருத்துகிறான்)
ராத்ரௌ	-	இரவில்
சுபுக ஸமர்ப்பித ஜாநுः	-	முழங்காலில் (குளிருக்கு இதமாக) முகத்தைப் புதைத்து வைத்திருக்கிறான்.
கரதல பிக்ஷுः	-	கையில் பிட்சை ஏந்துகிறான்.
தருதல வாஸः	-	மரத்தடியில் வசிக்கிறான்
ததபி	-	அப்படியிருந்தும்
ஆஸாபாஸः	-	ஆசையாகிய பாசக்கயிறு
ந முஞ்சதி	-	(அவனை) விடுவதில்லை.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கருத்துரை

ஒருவன் தவம் செய்கிறான். பகலில் அவன் எதிரில் தீ. முதுகின்மீது சூரிய வெப்பம். இரவில் குளிர் தாங்காமல் தன் மோவாயை முழங்காலில் பொத்திக் கொள்கிறான். பிட்சைப் பாத்திரமும் இல்லாமல் கைகளில் பிச்சை வாங்குகிறான். குடிசையு மின்றி மரத்தடியில் தங்குகிறான். இவ்வாறு தவமுயற்சி செய்ப வனையும் ஆசை விடுவதில்லை.

18. ஞானமில்லையேல் மோக்ஷமில்லை

குருதே கங்கா ஸாகர கமனம்
வ்ரத பரிபாலனம் அதவா தானம் ।
ஜ்ஞான விஹீன: ஸர்வ மதேன
முக்திம் ந பஜதி ஜன்ம ஸதேன ॥

பதவுரை

கங்கா ஸாகர கமனம்	-	(ஒருவன்) கங்கைக்கும் கடலுக்கும் (ஸ்நானம் செய்வதற்காகச்) செல்வதை யாவது
விரத பரிபாலனம்	-	விரதம் ஏற்பதையாவது
அதவா	-	அல்லது
தானம்	-	தானத்தையாவது
குருதே	-	செய்கிறான் (ஆனால்)
ஸர்வ மதேன	-	எல்லா மத ரீதியாகவும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ज्ञान विहीनः	-	ஞானமில்லாதவன்
जन्म शतेन	-	நூறு பிறவியானாலும்
मुक्तिं	-	மோக்ஷத்தை
न भजति	-	அடைவதில்லை.

கருத்துரை

கங்கைக்கும் கடலுக்கும் சென்று நீராடினாலும், விரதங்கள் பலவற்றை ஏற்றுச் செய்தாலும், தானங்கள் பல புரிந்தாலும் மோக்ஷம் கிடைக்காது. ஞானம் ஒன்றினால்தான் மோக்ஷம் கிட்டும். ஞானம் ஏற்படாமல் நூறு பிறவி எடுத்தாலும் முக்தி யடைய முடியாது.

19. வைராக்கியமே சுகம்

सुरमन्दिर तरुमूल निवासः
शय्या भूतलं अजिनं वासः ।
सर्व परिग्रह भोग त्यागः
कस्य सुखं न करोति विरागः ॥

ஸுரமந்திர தருமூல நிவாஸ:
ஶய்யா பூதலம் அஜினம் வாஸ: ।
ஸர்வ பரிக்ரஹ போக த்யாக:
கஸ்ய ஸுகம் ந கரோதி விராக: ॥

பதவுரை

सुरमन्दिर तरुमूल निवासः	-	கோயிலிலும் மரத்தடியிலும் வாசம்
भूतलं	-	தரை
शय्या	-	படுக்கை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அஜிநம்	-	தோல்
வாஸः	-	ஆடை
ஸர்வ பரிக்ரஹ போக த்யாகः	-	எல்லா உடமைப் பொருள்களையும் அனுபவிக்காமல் துறப்பது என்ற
விராகः	-	வைராக்கியம்
கஸ்ய	-	எவனுக்குத்தான்
ஸுகம்	-	சுகத்தை
ந கரோதி	-	செய்வதில்லை.

கருத்துரை

கோயிலிலோ மரத்தடியிலோ வாசம்; தரைமீது படுக்கை; தோல்தான் உடை; எல்லா இன்பங்களையும் எல்லாப் பற்றுக்களையும் துறந்துவிடும் வைராக்கியம் (முதலியவை) எவனுக்குத் தான் சுகமளிக்காது? (பரம சுகம் அளிக்கும்).

20. பிரம்மானந்தமே ஆனந்தம்

योगरतो वा भोगरतो वा
सङ्गरतो वा सङ्गविहीनः ।
यस्य ब्रह्मणि रमते चित्तं
नन्दति नन्दति नन्दत्येव ॥

யோகரதோ வா போகரதோ வா
ஸங்கரதோ வா ஸங்க விஹீநः ।
யஸ்ய ப்ரஹ்மணி ரமதே சித்தம்
நந்ததி நந்ததி நந்ததீயேவ ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பதவுரை

யோகரத: வா	-	யோகத்தில் ஈடுபட்டவனாக இருந்தாலும்
போகரத: வா	-	போகத்தில் ஈடுபட்டவனாக இருந்தாலும்
ஸங்கரத: வா	-	பிறர் சேர்க்கையில் ஈடுபட்டவனாக இருந்தாலும்
ஸங்க விஹீந:	-	பிறர் சேர்க்கை இல்லாதவனாக இருந்தாலும்
யஸ்ய	-	எவனுடைய
சித்தம்	-	மனதானது
ப்ரஹ்மணி	-	பிரம்மத்தில்
ரமதே	-	பற்றுக் கொண்டிருக்கிறதோ
(ஸ:)	-	அவன்
நந்ததி, நந்ததி, நந்ததி ஏவ	-	மகிழ்கிறான்; மகிழ்கிறான்; முக்காலமும் மகிழ்கிறான்.

கருத்துரை

ஒருவன் யோகத்தில் ஈடுபட்டவனாக இருந்தாலும் சரி, போகங்களை அனுபவிப்பவனாக இருந்தாலும் சரி; பிறருடன் தொடர்பு வைத்துக் கொண்டவனாக இருந்தாலும் சரி; யாருடனும் தொடர்பற்றவனாக இருப்பினும் சரி; மேற்கண்ட எந்த நிலையிலும் பிரும்மத்தின் மீது மனம் செலுத்தியவனாக இருந்தானானால் அவன் முக்காலத்திலும் ஆனந்தத்தைப் பெறுகிறான்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

21. யமன் அருகில் வராத உபாயம்

6 भगवद्गीता किञ्चिदधीता
गङ्गाजल लव कणिका पीता ।
सकृदपि येन मुरारि समर्चा
क्रियते तस्य यमेन न चर्चा ॥

பகவத்கீதா கிஞ்சிததீதா
கங்கா ஜல லவ கணிகா பீதா ।
ஸக்ருதபி யேந முராரி ஸமர்ச்சா
க்ரியதே தஸ்ய யமேந ந சர்ச்சா ॥

பதவுரை

யேந	-	எவனால்
பகவத்கீதா	-	பகவத் கீதையானது
கிஞ்சித்	-	கொஞ்சமாவது
அதீதா	-	கற்கப்பட்டதோ
(யேந)	-	எவனாலே
கங்கா ஜல லவ கணிகா	-	கங்கா ஜலத்துளியின் ஒரு பகுதியாவது
பீதா	-	குடிக்கப்பட்டதோ
(யேந)	-	எவனாலே
ஸக்ருத் அபி	-	ஒரு முறையாவது
முராரி ஸமர்ச்சா	-	விஷ்ணு பூசை
க்ரியதே	-	செய்யப்படுகிறதோ
தஸ்ய	-	அவனுக்கு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

யமேந - யமனாலே
சர்ச்சா - பேச்சு வார்த்தையானது
ந க்ரியதே - செய்யப்படுவதில்லை.

கருத்துரை

எந்த மனிதன் தன் வாழ்நாளில் பகவத்கீதை என்ற புனித நூலின் ஒரு சிறு பகுதியையாவது படித்தானோ, கங்கை நீரின் ஒரு துளியையாவது அருந்தினானோ, ஒரு முறையாவது பகவானுக்குப் பூசை செய்தானோ அவனைப் பற்றி எமன் பேசுவதேயில்லை. அதாவது அவனுக்கு யமதண்டனை இல்லை, முக்தியடைகிறான்.

22. இறைவா! என்னைக் காத்தருள்

புனரபி ஜननं புனரபி மரணं
புனரபி ஜननी ஜடரே शयनम् ।
इह संसारे बहुदुस्तारे
कृपयाऽपारे पाहि मुरारे ॥

புநரபி ஜநநம் புநரபி மரணம்
புநரபி ஜநநீ ஜடரே ஶயநம் ।
இஹ ஸம்ஸாரே பஹு துஸ்தாரே
க்ருபயாऽபாரே பாஹி முராரே ॥

பதவுரை

புநரபி - மறுபடியும்
ஜநநம் - பிறப்பு
புநரபி - மறுபடியும்
மரணம் - இறப்பு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

புநரபி	-	மறுபடியும்
ஜநநீ ஜடரே	-	தாயின் வயிற்றில்
ஶயநம்	-	படுக்கை (தங்குதல்)
பஹு	-	மிகவும்
துஸ்தாரே	-	கடக்க முடியாததும்
அபாரே	-	கரையில்லாததுமான
இஹ	-	இந்த
ஸம்ஸாரே	-	உலக வாழ்க்கையில்
ஹேமுராரே	-	ஹே முராரியே!
க்ருபயா	-	தயையினாலே
பாஹி	-	காப்பாற்று

கருத்துரை

ஹே பகவானே, இந்த ஸம்சாரமாகிய சமுத்திரம் கடக்க முடியாதது; இதற்குக் கரையும் இல்லை. இதில் மறுபடியும் மறு படியும் பிறக்க வேண்டும்; இறக்க வேண்டும். மறுபடியும் தாய் வயிற்றில் தங்கிப் பிறக்க வேண்டும். இப்படி முடிவில்லாத பிறத்தல் இறத்தலாகிய சிக்கலான சூழலிலிருந்து இறைவா! கருணையுடன் நீதான் கரை சேர்க்க வேண்டும். பிறத்தல் இறத்தல் அற்ற முக்தி நிலையை அளிக்க வேண்டும்.

23. யோகி பித்தன்போலிருப்பான்

रथ्या कर्पट विरचित कन्थः
पुण्यापुण्य विवर्जित पन्थः ।
योगी योग नियोजित चित्तः
रमते बालोन्मत्तवदेव ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ரத்யா கர்ப்பட விரசித கந்த:
புண்யா புண்ய விவர்ஜித பந்த: ।
யோகீ யோக நியோஜித சித்த:
ரமதே பாலோன்மத்தவதேவ ॥

பதவுரை

யோக நியோஜித சித்த:	-	யோகத்தில் இணைக்கப்பட்ட உள்ளத்தையுடைய
யோகீ	-	யோகியானவன்
ரத்யா கர்ப்பட விரசித கந்த:	-	தெருவில் கிடக்கும் கந்தல் துணியைக் கட்டியிருப்பான்
புண்யாபுண்ய விவர்ஜித பந்த:	-	புண்ணியம், பாபம் இரண்டும் இல்லாத (தனி) வழியைப் பின்பற்றுவான்
பால உன்மத்தவத் ஏவ	-	குழந்தை போலவும், பித்தன் போலவும்
ரமதே	-	(தனக்குத்தானே) மகிழ்ச்சியடைகிறான்.

கருத்துரை

ஆண்டவனிடம் உள்ளத்தைச் செலுத்தி உலகை மறந்த யோகியானவன் தெருவில் கிடக்கும் கந்தல் துணியை அணிந்து கொள்வான். அவன் செயலெல்லாம் புண்ணியமா, பாவமா, ஆசாரமா, அனாசாரமா என்றெல்லாம் நாம் பகுத்தறியமுடியாதபடி ஒரு தனி முறையாக இருக்கும். அத்தகைய யோகிகள் குழந்தைகள் போலவும் பித்தர்கள் போலவும் மகிழ்ச்சியில் திளைப்பார்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

24. 'நான் யார்?' என்று நினைத்துப் பார்

कस्त्वं कोऽहं कुत आयातः
का मे जननी को मे तातः ।
इति परिभावय सर्वमसारं
विश्वं त्यक्त्वा स्वप्नविचारम् ॥

கஸ்த்வம் கோஹம் குத ஆயாத:
கா மே ஜநநீ கோ மே தாத: ।
இதி பரிபாவய ஸர்வமஸாரம்
விஸ்வம் த்யக்த்வா ஸ்வப்ந விசாரம் ॥

பதவுரை

த்வம்	-	நீ
கः	-	யார்?
அஹம்	-	நான்
கः	-	யார்?
குதः	-	எங்கிருந்து
ஆயாதः	-	வந்தேன்
மே	-	என்னுடைய
ஜநநீ	-	தாய்
கா	-	எவள்?
மே	-	என்னுடைய
தாதः	-	தந்தை
கः	-	யார்?
இதி	-	என்று

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விஶ்வம்	-	உலகை
ஸ்வப்ந விசாரம்	-	கனவுப் பேச்சாக
த்யக்த்வா	-	ஒதுக்கிவிட்டு
ஸர்வம்	-	அனைத்தையும்
அஸாரம்	-	ஸாரமில்லாததாக
பாவய	-	எண்ணுவாயாக

கருத்துரை

''நீ யார்? நான் யார்? நான் எங்கிருந்து வந்தேன்? என் தாய் யார்? தந்தை யார்? இதெல்லாம் கனவுக்காட்சி போன்று மாயை அல்லவா!'' என்று உன் மனத்தில் பாவனை செய்து, இந்த உலகம் ஸாரமற்ற பொருள் என்று முடிவு செய்வாயாக!

25. எல்லாம் விஷ்ணுமயம்

त्वयि मयि चान्यत्रैको विष्णुः
व्यर्थं कुप्यसि मय्यसहिष्णुः ।
सर्वस्मिन्नपि पश्यात्मानं
सर्वत्रोत्सृज भेदज्ञानम् ॥

த்வயி மயி சான்யத்ரைகோ விஷ்ணுः
வ்யர்த்தம் குப்யஸி மய்யஸஹிஷ்ணுः ।
ஸர்வஸ்மிந்நபி பஶ்யாத்மானம்
ஸர்வத்ரோத்ஸ்ருஜ பேதஜ்ஞானம் ॥

பதவுரை

த்வயி	-	உன்னிடமும்
மயி	-	என்னிடமும்
அந்யத்ர ச	-	வேறு இடங்களிலும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஏகः	-	ஒரே
விஷ்ணுः	-	விஷ்ணுதான் (நிறைந்து இருக்கிறார்)
மயி	-	என்னிடம்
அஸஹிஷ்ணுः	-	பொறாமை கொண்டு
வ்யர்த்தம்	-	வீணாக
குப்யஸி	-	கோபப்படுகிறாய்
ஸர்வஸ்மிந்அபி	-	எல்லாவற்றிலும்
ஆத்மானம்	-	தன்னையே
பஶ்ய	-	பார்
ஸர்வத்ர	-	எல்லாவிடத்திலும்
பேதஜ்ஞானம்	-	பிரித்துப்பார்க்கும் எண்ணத்தை
உத்ஸ்ருஜ	-	விட்டுவிடு

கருத்துரை

உன்னிடத்தும் என்னிடத்தும் மற்றெல்லாவிடத்தும் ஸ்ரீ மஹா விஷ்ணுவாகிய பரமாத்மா பரவியுள்ளார். நீ வீணாக என்னிடம் பொறாமை கொண்டு ஏன் என்னைப் பார்த்து கோபப்படுகிறாய்? நீ 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்றபடி எல்லாவிடத்திலும் உன்னையே பார். அப்பொழுது 'நீ, நான்' என்பது போன்ற பேதஞானம் அகன்று விடும்.

26. எல்லாரையும் சமமாகப் பார்

शत्रौ मित्रे पुत्रे बन्धौ
मा कुरु यत्नं विग्रहसन्धौ ।
भव समचित्तः सर्वत्र त्वं
वाञ्छस्यचिराद् यदि विष्णुत्वम् ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஶத்ரௌ மித்ரே புத்ரே பந்தௌ
மா குரு யத்நம் விக்ரஹஸந்தௌ ।
பவ ஸமசித்த: ஸர்வத்ர த்வம்
வாஞ்ச்சஸ்யசிராத் யதி விஷ்ணுத்வம் ॥

பதவுரை

த்வம்	-	நீ
விஷ்ணுத்வம்	-	விஷ்ணுத்தன்மையை (முத்தியை)
அசிராத்	-	விரைவில்
வாஞ்ச்சஸி யதி	-	விரும்புவாயானால்
ஶத்ரௌ	-	பகைவனிடத்திலும்
மித்ரே	-	நண்பனிடத்திலும்
புத்ரே	-	பிள்ளையிடத்திலும்
பந்தௌ	-	உறவினனிடத்திலும்
விக்ரஹ ஸந்தௌ	-	சண்டை செய்வதிலும், சமாதானம் செய்வதிலும்
யத்நம்	-	முயற்சியை
மா குரு	-	செய்யாதே
ஸர்வத்ர	-	எல்லாரிடத்திலும்
ஸமசித்த:	-	ஒரே விதமான மனமுள்ளவனாக
பவ	-	இருப்பாயாக.

கருத்துரை

உனக்கு விரைவில் மோக்ஷம் அடையவேண்டுமென்ற விருப்பமிருந்தால், பகைவன், நண்பன், மகன், உறவினன் இவர்கள் யாரிடமும் பகைமையையோ நட்பையோ பாராட்டாதே. ஸமசித்தம் உடையவனாக இரு.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai.

27. ஆன்மாவை உயர்த்தும் வழி

कामं क्रोधं लोभं मोहं
त्यक्त्वात्मानं भावय कोऽहम् ।
आत्मज्ञान विहीना मूढाः
ते पच्यन्ते नरक निगूढाः ॥

காமம் க்ரோதம் லோபம் மோஹம்
த்யக்த்வாத்மாநம் பாவய கோஹம் ।
ஆத்ம ஜ்ஞாந விஹீநா மூடாः
தே பச்யந்தே நரக நிகூடா : ॥

பதவுரை

காமம்	-	காமம்
க்ரோதம்	-	கோபம்
லோபம்	-	பணத்தாசை
மோஹம்	-	மயக்கம் (என்பவைகளை)
த்யக்த்வா	-	விட்டு விட்டு
அஹம்	-	நான்
கः	-	யார் (என்று)
ஆத்மாநம்	-	தன்னைப்பற்றி
பாவய	-	நினைத்துப்பார்
(யே)	-	எந்த
மூடாः	-	மூடர்கள்
ஆத்மஜ்ஞாந விஹீநாः	-	ஆன்மஞானமில்லாதவர்களோ
தே	-	அவர்கள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

CC-0. Vasika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai.

நரகநிகூடாः - நரகத்தில் மூழ்கி

பச்யந்தே - துன்பத்தை அனுபவிக்கிறார்கள்.

கருத்துரை

'தான் யார்?' என்பதை அறிதலாகிய ஆன்மஞானமில்லாத மூடர்கள் நரகத்தில் உழல்வார்கள். ஆகவே, காமம், கோபம், பணத் தாசை, மதிமயக்கம் என்பவைகளைத் துறந்து 'நான் யார்?' என்பதை எப்பொழுதும் சிந்தனை செய்ய வேண்டும்.

28. நாம் என்ன செய்ய வேண்டும்?

8

गेयं गीता नामसहस्रं
ध्येयं श्रीपति रूपं अजस्रम् ।
नेयं सज्जन सङ्गे चित्तं
देयं दीनजनाय च वित्तम् ॥

கேயம் கீதா நாம ஸஹஸ்ரம்
த்யேயம் ஸ்ரீபதி ரூபம் அஜஸ்ரம் ।
நேயம் ஸஜ்ஜந ஸங்கே சித்தம்
தேயம் தீநஜநாய ச வித்தம் ॥

பதவுரை

கீதா நாமஸஹஸ்ரம் - கீதையும் (விஷ்ணு) ஸஹஸ்ரநாமமும்

கேயம் - பாடப்படவேண்டும்

ஸ்ரீபதி ரூபம் - ஸ்ரீமந் நாராயணனுடைய உருவம்

அஜஸ்ரம் - எப்பொழுதும்

த்யேயம் - தியானம் செய்யப்படவேண்டும்

சித்தம் - மனமானது

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸத்ஜந ஸங்கே	-	நல்லோர்களுடைய சேர்க்கையில்
நேயம்	-	அடைவிக்கப்படவேண்டும்
தீநஜநாய	-	ஏழை மக்களுக்கு
வித்தம்	-	பணமானது
தேயம்	-	கொடுக்கப்படவேண்டும்.

கருத்துரை

(நற்கதியை அடைய விரும்புபவர்கள்), தினந்தோறும் பகவத் கீதையையும் விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தையும் பாராயணம் செய்ய வேண்டும். எப்பொழுதும் பகவானுடைய உருவத்தை தியானம் செய்து கொண்டிருக்க வேண்டும். நல்லவர்களுடைய சேர்க்கையில் மனத்தைச் செலுத்த வேண்டும். ஏழை மக்களுக்கு இயன்றதைக் கொடுத்து உதவ வேண்டும்.

29. பாவம் செய்வதை விடுவதில்லையே!

सुखतः क्रियते रामाभोगः
पश्चाद्धन्त शरीरे रोगः ।
यद्यपि लोके मरणं शरणं
तदपि न मुञ्चति पापाचरणम् ॥

ஸுகத: க்ரியதே ராமாபோக:
பஶ்சாத் ஹந்த ஶரீரே ரோக: ।
யத்யபி லோகே மரணம் ஶரணம்
ததபி ந முஞ்சதி பாபாசரணம் ॥

பதவுரை

ராமாபோகः	-	பெண்ணின்ப அநுபவம்
ஸுகத:	-	சுகமாக

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

CC-0. Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

க்ரியதே	-	செய்யப்படுகிறது
பஶ்சாத்	-	பிறகு
ஹந்த!	-	ஐயோ!
ஶரீரே	-	உடலில்
ரோகः	-	நோய் (உண்டாகிறது)
யத்யபி	-	எப்படியாயினும்
லோகே	-	உலகில்
மரணம்	-	மரணம் என்பது
ஶரணம்	-	முடிவானது
ததபி	-	அப்படியிருந்தாலும்
பாபாசரணம்	-	பாவத்தைச் செய்தலை
ந முஞ்சதி	-	விடுவதில்லை.

கருத்துரை

உலகில், சுகமாக இருக்கிறதென்று பெண்ணோடு ஆர்வத்துடன் கூடுகிறான். ஆனால், பிறகு அவன் நோயால் பீடிக்கப்படுகிறான். மரணம் தவிர்க்க முடியாததெனத் தெரிந்தும் பாவம் செய்வதை எவனும் விடுவதில்லையே!

30. மனத்தைக் கட்டுப்படுத்து

प्राणायामं प्रत्याहारं
नित्यानित्य विवेक विचारम् ।
जाप्य समेत समाधि विधानं
कुर्ववधानं महद्वधानम् ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ப்ராணாயாமம் ப்ரத்யாஹாரம்
நித்யாநித்ய விவேக விசாரம் ।
ஜாப்ய ஸமேத ஸமாதி விதாநம்
குர்வவதாநம் மஹதவதாநம் ॥

பதவுரை

ப்ராணாயாமம்	-	மூச்சுக்காற்றைக் கட்டுப்படுத்தலையும்
ப்ரத்யாஹாரம்	-	புலனடக்கத்தையும்
நித்ய அநித்ய விவேக விசாரம்	-	நிலையானது நிலையற்றது என்ற பாகு பாட்டைப்பற்றி யோசித்தலையும்
ஜாப்ய ஸமேத ஸமாதி விதாநம்	-	மந்த்ரஜபத்துடன் கூடிய சமாதியை அநுஷ்டித்தலையும்
அவதாநம்	-	மனம் ஒருநிலைப்படுதலையும்
மஹத்	-	பெரிதான
அவதாநம்	-	ஒருநிலைப்பாட்டையும்
குரு	-	செய்வாயாக

கருத்துரை

பிராணாயாமம் என்னும் மூச்சுக் காற்றைக் கட்டுப்படுத்தலையும், பிரத்தியாஹாரம் என்னும் புலனடக்கத்தையும், நிலையான பொருள் எது, நிலையற்ற பொருள் எது என்ற பாகுபாட்டை யோசித்தலையும், ஜபத்தையும், சமாதி என்னும் அசையா நிலையையும், மனத்தின் ஒருநிலைப்பாட்டையும் நீ ஏற்றுச் செய்தல் வேண்டும்.

31. குருவின் திருவடிகளே சரணம்!

गुरुचरणाम्बुज निर्भर भक्तः
संसारात् अचिराद् भवमुक्तः ।

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

सेन्द्रिय मानस नियमादेवं
द्रक्ष्यसि निज हृदयस्थं देवम् ॥

குரு சரணாம்புஜ நிர்ப்பர பக்தः
ஸம்ஸாரா தசிராத் பவமுக்தः ।
ஸேந்த்ரிய மாநஸ நியமா தேவம்
த்ரக்ஷ்யஸி நிஜ ஹ்ருதயஸ்த்தம் தேவம் ॥

பதவுரை

குரு சரணாம்புஜ நிர்ப்பர பக்தः	-	குருவினுடைய திருவடிக் கமலங்களில் பாரத்தை வைத்து பக்தி செய்பவனாகி
அசிராத்	-	விரைவில்
ஸம்ஸாராத்	-	உலகிலிருந்து
பவமுக்தः	-	பிறவியற்றவனாகி
ஏவம்	-	இப்படி
ஸேந்த்ரிய மாநஸ நியமாத்	-	புலன்களையும் மனதையும் கட்டுப் படுத்துவதாலே
நிஜ ஹ்ருதயஸ்த்தம்	-	(தன்) உள்ளத்தில் உள்ள
தேவம்	-	இறைவனை
த்ரக்ஷ்யஸி	-	பார்க்கப் போகிறாய்.

கருத்துரை

நீ உன்னுடைய புண்ணிய பாவங்களாகிய பாரத்தை யெல்லாம் குருவினிடம் அர்ப்பணம் செய்து, பக்தி செய்வாயே யானால் விரைவிலேயே உனக்குப் பிறவித்தளை நீங்கும். புலன் களையும் மனத்தையும் கட்டுப்படுத்துவாயேயானால் உன் உள்ளத் திலே அந்தர் யாமியாகத் தங்கியுள்ள பகவானைத் தரிசிப்பாய்.

சுபம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ஹரிஹர ஸ்தோத்ரம்

[யமன் தன் தூதர்களுக்கு *'இந்த ஸ்தோத்ரத்திலுள்ள சிவகேசவநாமங்களை ஜபிப்பவர்களை விட்டுவிடு'* என்று கூறுகிறானாம்.]

கோவிந்த மாதவ முகுந்த ஹரே முராரே
ஶம்போ ஶிவேஶ ஶஶிஶேகர ஶூலபாணே ।
தாமோதராச்யுத ஜநார்தந வாஸுதேவ
த்யாஜ்யா படா ய இதி ஸந்ததa மாமதந்தி ॥ 1

கங்காதராந்தகரிபோ ஹர நீலகண்ட
வைகுண்ட கைடபரிபோ கமடாப்ஜபாணே ।
பூதேஶ கண்டபரஶோ ம்ருட சண்டிகேஶ
த்யாஜ்யா படா ய இதி ஸந்ததa மாமதந்தி ॥ 2

விஷ்ணோ ந்ருஸிம்ஹ மதுஸூதந சக்ரபாணே
கௌரீபதே கிரிஶ ஶங்கர சந்த்ரசூட ।
நாராயணாஸுர நிபர்ஹண ஶார்ங்கபாணே
த்யாஜ்யா படா ய இதி ஸந்ததa மாமதந்தி ॥ 3

ம்ருத்யுஞ்ஜயோக்ர விஷபக்ஷண காமஶத்ரோ
ஶ்ரீகாந்த பீதவஸநாம்புதநீல ஶௌரே ।
ஈஶாந க்ருத்திவஸந த்ரிதஶைகநாத
த்யாஜ்யா படா ய இதி ஸந்ததa மாமதந்தி ॥ 4

லக்ஷ்மீபதே மதுரிபோ புருஷோத்தமாத்ய
ஶ்ரீகண்ட திக்வஸந ஶாந்த பிநாகபாணே ।
ஆநந்தகந்த தரணீதர பத்மநாப
த்யாஜ்யா படா ய இதி ஸந்ததa மாமதந்தி ॥ 5

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸர்வேஶ்வர த்ரிபுரஸூதந தேவதேவ
ப்ரஹ்மண்யதேவ கருடத்வஜ ஶங்கபாணே ।
த்ர்யக்ஷோரகாபரண பாலம்ருகாங்க மௌளே
த்யாஜ்யா படா ய இதி ஸந்தத மாமநந்தி ॥ 6

ஶ்ரீராம ராகவ ரமேஶ்வர ராவணாரே
பூதேஶ மங்மதரிபோ ப்ரமதாதிநாத ।
சாணூரமர்தந ஹ்ருஷீகபதே முராரே
த்யாஜ்யா படா ய இதி ஸந்தத மாமநந்தி ॥ 7

ஶூலிந் கிரீஶ ரஜநீஶ கலாவதம்ஸ
கம்ஸப்ரணாஶந ஸநாதந கேஶிநாஶ ।
பர்க த்ரிநேத்ர பவ பூதபதே புராரே
த்யாஜ்யா படா ய இதி ஸந்தத மாமநந்தி ॥ 8

கோபீபதே யதுபதே வஸுதேவஸூநோ
கர்ப்பூரகௌர வ்ருஷபத்வஜ பாலநேத்ர ।
கோவர்தநோத்தரண தர்மதுரீண தேவ
த்யாஜ்யா படா ய இதி ஸந்தத மாமநந்தி ॥ 9

ஸ்த்தாணோ த்ரிலோசந பிநாகதர ஸ்மராரே
க்ருஷ்ணாநிருத்த கமலாகர கல்மஷாரே ।
விஶ்வேஶ்வர த்ரிபதகார்த்ர ஜடாகலாப
த்யாஜ்யா படா ய இதி ஸந்தத மாமநந்தி ॥ 10

அஷ்டோத்தராதிக ஶதேந ஸுசாரு நாம்நாம்
ஸந்தர்ப்பிதாம் லலிதரத்ந கதம்பகேந ।
ஸந்நாயகாம் த்ருடகுணாம் நிஜகண்டகாம் யः
குர்யாதிமாம் ஸ்ரஜமஹோ ஸ யமம் ந பஶ்யேத் ॥ 11

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கணாவூசது:

இத்தம் த்விஜேந்த்ர விஜப்ருத்யகணாந் ஸதைவ
ஸம்ஸிக்ஷயே தவநிகாந் ஸ ஹி தர்மராஜ: ।
அந்யேபி யே ஹரி ஹராரர்க்கதரா தராயாம்
தே தூரத: புநரஹோ பரிவர்ஜநீயா: ॥ 12

அகஸ்த்ய உவாச –

யோ தர்மராஜசிதாம் லலிதப்ரபந்தாம்
நாமாவளிம் ஸகல கல்மஷ பீஜஹந்த்ரீம் ।
தீரோத்ர கௌஸ்துபப்ருத: ஸஸிபூஷணஸ்ய
நித்யம் ஜபேத் ஸ்தநரஸம் ந பிபேத் ஸ மாது: ॥ 13

இதி ஸ்ருண்வந் கதாம் ரம்யாம் ஸிவஸர்மா
ப்ரியோநுகாம் ।
ப்ரஹர்ஷவக்த்ர: புரதோ ததர்ஸாப்ஸரஸாம் புரீம் ॥ 14

இதி ஸ்ரீஸ்காந்தபுராணே காஸீகண்டே தர்மராஜவிரசிதம்
ஸ்ரீ ஹரிஹர ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

திருச்சித்ரகூடம்
தில்லை ஸ்ரீ கோவிந்தராஜன்

மங்களாசாஸனப் பாசுரங்கள்

ஊன்வாட வுண்ணா துயிர்காவ லிட்டே
உடலிற் பிரியாப் புலனைந்தும் நொந்து,
தாம்வாட வாடத் தவம்செய்ய வேண்டா
தமதா இமையோ ருலகாள கிற்பீர்,
கானாட மஞ்ஞைக் கணமாட மாடே
கயலாடு கானீர்ப் பழனம் புடைபோய்,
தேனாட மாடக் கொடியாடு தில்லைத்
திருச்சித்ர கூடம் சென்றுசேர் மின்களே.

காயோடு நீடு கனியுண்டு வீசு
கடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம், ஐந்து
தீயோடு நின்று தவஞ்செய்ய வேண்டா
திருமார்ப னைச்சிந்தை யுள்வைத்து மென்பீர்,
வாயோது வேதம் மல்கின்ற தொல்சீர்
மறையாளர் நாளும் முறையால் வளர்த்த,
தீயோங்க வோங்கப் புகழோங்கு தில்லைத்
திருச்சித்ர கூடம் சென்றுசேர் மின்களே.

– திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி 3-2-1,2

கருத்துரை

அதோ பாருங்கள்! தில்லைத் திருச்சித்ரகூடம் !! கோபுரத் துச்சியில் கொடிகள் ஆடுகின்றன; தேனீக்கள் ரீங்காரமிட்டுப் பறக் கின்றன; சுற்றிலும் எங்கும் செழுமை மிகு விளைநிலங்கள்; இடையிடையே குளங்கள்; அவற்றில் வாளைகள் பாய்கின்றன;

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அயலே மயில் கூட்டங்கள் தோகை விரித்து ஆடுகின்றன; அவ் விடத்தை சென்றடையுங்கள்.

உணவு மறுத்து ஊறும் உயிரும் ஐம்புலன்களும் மிகவும் வாட்டமுற வருந்தித் தவம் ஒன்றும் செய்ய வேண்டா.

திருச்சித்ரகூடத்தை அடைந்த மாத்திரத்திலேயே சுவர்க்க லோகம் முழுவதும் உங்களுடையதாகும். அதனை ஆளும் வலிமை யையும் பெறுவீர்கள்.

பச்சைக் காய்களை மாத்திரமே உண்டு கடுந்தவம் புரிய வேண்டா; கனிந்த பழங்களை மாத்திரமே உண்டு கடுந்தவம் புரிய வேண்டா; வெறும் காற்றை மாத்திரமே உண்டு கடுந்தவம் புரிய வேண்டா; நீண்டகாலம் பஞ்சாக்னி மத்தியில் நின்று கடுந்தவம் புரிய வேண்டா; மலர்மகளை மார்பகத்தே வைத்த மணவாளனை உங்கள் மனத்தகத்தே தியானம் செய்யுங்கள்; சுரம் தவறாது பழகிய வாயால் முறையாக வேதமோதும் அந்தணாளர்கள் விதிப்படி வளர்த்த ஹோமாக்னி எப்போதும் விளங்கும் புகழ்மிக்க தில்லைத் திருச்சித்ர கூடத்தைச் சென்று அடையுங்கள். (அதுபோல் வைகுண்டம் உம்முடையதாக.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Rajagopalan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீமத் பகவத் கீதை

தமிழில் மூலமும் உரையும் ரூ. காசு 30 00

(ISBN 81-87130-31-8)

ஸகல தேவதேவிகளின் க்ருபைக்குப் பாத்திரராக

விரத பூஜா விதானம்

(36 விரத பூஜைகள்)

புதிய பதிப்பு

304 பக்கங்கள் ★ விலை ரூ. 22 ★ தபாலில் ரூ. 42

(ISBN 81-87130-55-5)

விநாயக விஜயம்

(விநாயக புராணம்)

320 பக்கங்கள் ★ விலை ரூ. 30 ★ தபாலில் ரூ. 51

(ISBN 81-87130-23-7)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

லிப்கோவின் மகோன்னத நூல் !

மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள் அருளிச்செய்த

நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

(ISBN 81-87130-57-1

- பெரிய எழுத்துக்களில் தெளிவாக அச்சிடப்பட்டுள்ள சிறந்த பதிப்பு.
- ஒவ்வொரு பத்தின் விசேஷக் குறிப்பும், ஒவ்வொரு பாசுரத்தின் பொதுக் கருத்தும் மனதைத் தொடும்வண்ணம் தரப்பட்டுள்ளது.
- பன்னிரு ஆழ்வார்கள் வரலாறு, 108 திவ்யதேச வைபவம், பாசுர முதற் குறிப்பகராதி ஆகியவை உட்பட.
- ஒவ்வோர் இல்லத்தையும் அலங்கரிக்கவேண்டிய ஒப்பற்ற பதிப்பு.

2 பாகங்களில் 1670 பக்கங்கள் - முழு காலிகோ பைண்டிங்

2 பாகங்களும் சேர்ந்து விலை ரூ. 180

(தபால் செலவு ரூ. 33 தனி)

சங்கர் பிரிண்டர்ஸ் (பி) லிட் சென்னை - 600 042

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ :

லிப்கோவின் ஸர்வஸித்தி நல்கும்

ஸ்ரீ ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரங்கள்

(மூலம் தமிழில்)

	ரூ. காசு		ரூ. காசு
1. ஸ்ரீ விஷ்ணு	ரூ. 5.00	17. ஸ்ரீ அந்நபூர்ணா	ரூ. 4.00
2. ஸ்ரீ லலிதா	ரூ. 4.00	18. ஸ்ரீ காயத்ரீ	ரூ. 4.00
3. ஸ்ரீ துர்கா	ரூ. 5.00	19.	
4. ஸ்ரீ லக்ஷ்மீ	ரூ. 5.00	20. ஸ்ரீ பவானீ	ரூ. 3.00
5. ஸ்ரீ ஸரஸ்வதீ	ரூ. 4.00	21. ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி	ரூ. 5.00
6. ஸ்ரீ சாகம்பரீ	ரூ. 5.00	22.	
7. ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹர்	ரூ. 4.00	23. ஸ்ரீ ஸூர்யன்	ரூ. 4.00
8. ஸ்ரீ லக்ஷ்மீஹயக்ரீவர்	ரூ. 5.00	24. ஸ்ரீ சாஸ்தா	ரூ. 4.00
9. ஸ்ரீ ராமர்	ரூ. 5.00	25.	
10. ஸ்ரீ ஹநுமார்	ரூ. 5.00	26.	
11. ஸ்ரீ வேங்கடேசர்	ரூ. 4.00	27.	
12. ஸ்ரீ ஸுதர்சநர்	ரூ. 5.00	28	
13. ஸ்ரீ க்ருஷ்ணர்	ரூ. 4.00	29.	
14. ஸ்ரீ கணபதி	ரூ. 5.00	30. ஸ்ரீ ராகவேந்த்ரர்	ரூ. 4.00
15. ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யர்	ரூ. 4.00	31. ஸ்ரீ மஹா ம்ருத்யுஞ்ஜயர்	ரூ. 3.00
16. ஸ்ரீ சிவன்	ரூ. 4.00		

லிப்கோவின் பிற வெளியீடுகள்

	ரூ. காசு
நவக்ரஹ க்ஷேத்ர புராணம்	18.00
விரத பூஜா விதாநம் (36 விரத பூஜைகள்)	25.00
அபிராமி அந்தாதி - மூலமும் உரையும்	6.00
ஸௌந்தர்யலஹரீ-ஸம்ஸ்க்ருத, தமிழ் மூலம் ; உரை	10.00
ஸகல கார்யஸித்தியும் ஸ்ரீ தேவீ பாகவதமும்	16.00
பெரிய புராணம் (கதைச் சுருக்கம்)	6.00
திருவிளையாடற் புராணம் (கதைச் சுருக்கம்)	6.00
ஸ்ரீ ஸத்யநாராயண வ்ரதம்	4.00

விலைகள் மாறுதலுக்குட்பட்டவை - தபால் சிலவு தனி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மோஹமுத்கரம் (அதாவது, மோகத்தைத் தகர்க்கும் சம்மட்டி) என்ற முதற்பெயர் கொண்ட இந்த ஸ்தோத்ரம் 'பஜகோவிந்தம்' என்று தொடங்குவதால் "பஜகோவிந்தம்" என்னும் பெயராலேயே அழைக்கப்படுகிறது.

பல தத்துவக் கருத்துக்கள் செறிந்த இந்த ஸ்தோத்ரத்தை எல்லாரும் படித்து, மனனம் செய்து மேன்மையடைய வேண்டும்.

பதவுரையையும் கருத்துரையையும் படித்தால், கூடவே ஸம்ஸ்க்ருத மொழிஞானமும் ஏற்படும் என்று அவை சேர்க்கப்பட்டுள்ளன.

BHAJA GOVINDAM

TEXT IN SAMSKRIT & TAMIL

WITH WORD FOR WORD MEANING

AND GIST IN TAMIL

THE LITTLE FLOWER CO.

T. Nagar, Chennai - 600 017

e-mail : info@lifcobooks.com http://www.lifcobooks.com

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,